Thiruppugazh 110

Muruga · Tamil

அவனிதனிலே பிறந்து மதலை எனவே தவழ்ந்து
அழகு பெறவே நடந்து இளைஞோனாய்

அருமழலையே மிகுந்து குதலை மொழியே புகன்று
அதிவிதம் அதாய் வளர்ந்து பதினாறாய்

சிவகலைகள் ஆகமங்கள் மிகவுமறை ஓதும் அன்பர்
திருவடிகளே நினைந்து துதியாமல்

தெரிவையர்கள் ஆசை மிஞ்சி வெகுகவலையாய் உழன்று
திரியும் அடியேனை உன்றன் அடிசேராய்

மவுன உபதேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீதணிந்த மகதேவர்

மனமகிழவே அணைந்து ஒருபுறமதாகவந்த
மலைமகள் குமார துங்க வடிவேலா

பவனி வரவே உகந்து மயிலின் மிசையே திகழ்ந்து
படி அதிரவே நடந்த கழல்வீரா

பரம பதமே செறிந்த முருகன் எனவே உகந்து
பழனிமலை மேல் அமர்ந்த பெருமாளே.